Australian Human Rights Commission
everyone, everywhere, everyday

# முறைப்பாடு ஒன்றைச் செய்தல்

பாலியல், இனம், உடலியலாமை மற்றும் வயதுப் பாகுபாடு, ---- பாகுபாடு மற்றும் மனித உரிமை மீறல்கள் ஆகியன சம்பந்தப்பட்ட சட்ட விரோத முறைப்பாடுகளை விசாரித்து அவற்றிற்குத் தீர்வு காணும் சுயாதீனமான அமைப்பே 'ஆஸ்திரேலிய மனித உரிமைகள் ஆணையம்' ஆகும்.

## எமக்கு நீங்கள் எதைப் பற்றி முறைப்பாடு செய்யலாம்

- *பாலினம், பாலின அடையாளம், கலப்புப்-பால் நிலை, கர்ப்பநிலை, திருமண உறவு அல்லது வாழ்க்கைத்துணை நிலை, தாய்ப்பாலூட்டல், குடும்பப் பொறுப்புகள் மற்றும் பாலியல் நாட்டம் ஆகியவற்றின் அடிப்படையிலான பால்ரீதி உபத்திரவங்களும், பாகுபாடும்* ***'பால் ரீதிப் பாகுபா'****ட்டில் உள்ளடங்கும்.*

- *உடல்ரீதியான, அறிவுரீதியான, உணர்வுரீதியான, கல்வி மற்றும் உளவியல் ரீதியான இயலாமைகள்; சுகவீனங்கள் அல்லது நோய்கள்; மருத்துவ நிலைகள்; வேலை சம்பந்தப்பட்டக் காயங்கள்; கடந்தகால, நிகழ்கால மற்றும் வருங்கால இயலாமைகள்; மற்றும் இயலாமை உபகரணங்கள்; உதவிக்கான விலங்கினங்கள் மற்றும் இயலாமையுள்ள ஒருவருடனான தொடர்பு ஆகியவற்றின் அடிப்படையிலான பாகுபாடுகள்* ***'இயலாமைப் பாகுபா'****ட்டில் உள்ளடங்கும்.*

- *இனவெறி, மற்றும் இனம், நிறம், மரபு, தேசிய அல்லது இனப் பூர்வீகம் மற்றும் குடிவரவு நிலை ஆகியவற்றின் அடிப்படையில் செய்யப்படும் பாகுபாடுகள்* ***'இனரீதிப் பாகுபா'****ட்டில் உள்ளடங்கும்.*

- *அதி இள வயதினராக அல்லது கூடிய வயதுடையவராக இருப்பதன் அடிப்படையிலான பாகுபாடுகள்* ***'வயது-ரீதிப் பாகுபாட்'****டில் உள்ளடங்கும்.*

- *மதம், குற்றச்செயல் பதிவு, தொழிற்சங்கச் செயற்பாடுகள், அரசியல் கருத்து மற்றும் சமூகப் பூர்வீகம் ஆகியவற்றின் அடிப்படையிலான பாகுபாடுகள்* ***'சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு (ILO III) சட்டப் பாகுபா'****ட்டில் உள்ளடங்கும்.*

- *'சர்வதேசக் குடிமை மற்றும் அரசியல் உரிமைகள் ஒப்பந்தம்'* (Covenant on Civil and Political Rights), *'சிறார் உரிமைகள் ஒப்பந்தம்'* (Convention on the Rights of the Child) *மற்றும் 'இயலாமையுடையோர் உரிமைகள் ஒப்பந்தம்'* (Convention on the Rights of Persons with Disabilities) *போன்ற குறிப்பிட்ட சர்வதேச மனித உரிமைகள் ஒப்பந்தப்பத்திர மீறல்களாகச் சாட்டப்படும் செயல்கள் மீது பொதுநல அரசினால் அல்லது அதன் சார்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்* ***'மனித உரிமைக்'****ளில் உள்ளடங்கும்.*

April 2020

ஆஸ்திரேலியாவில் எங்கு வசிப்பவராக இருந்தாலும் நீங்கள் முறைப்பாடு ஒன்றைச் செய்யலாம், மற்றும் முறைப்பாட்டினைச் செய்வதற்குச் செலவு ஏதும் இல்லை. முறைப்பாடு செய்வதற்கான படி நிலைகள் கீழே கோடிட்டுக் காண்பிக்கப்பட்டுள்ளன.

## விசாரணை ஒன்றை மேற்கொள்ளுங்கள்

- *ஏதாவதொரு விடயத்தைப் பற்றி முறைப்பாடு செய்ய இயலுமா என்பது உங்களுக்கு உறுதியாகத் தெரியவில்லை என்றால், 'ஆணைய'த்தின் 'தேசியத் தகவல் சேவை'யுடன்* **1300 656 419** *எனும் இலக்கம் அல்லது* infoservice@humanrights.gov.au *எனும் மின்னஞ்சல் மூலம் நீங்கள் தொடர்புகொள்ளலாம்.*

- *இந்தச் செயல்பாட்டினைத் துவங்குவதற்காக முறைப்பாட்டுப் படிவம் ஒன்றை எம்மால் அனுப்ப இயலும்.*

- *எம்மால் உங்களுக்கு உதவ இயலவில்லை என்றால், உங்களுக்கு உதவக்கூடிய ஒருவருக்கு உங்களைப் பரிந்துரைக்க நாங்கள் முயற்சி செய்வோம்.*

## முறைப்பாடு ஒன்றைச் செய்யுங்கள்

- *முறைப்பாடு ஒன்று எழுத்துவடிவத்தில் இருக்கவேண்டியது கட்டாயம். முறைப்பாட்டுப் படிவம் ஒன்றினை நிரப்பி அதை நீங்கள் எமக்கு அஞ்சல் அல்லது தொலைநகல் மூலம் அனுப்பலாம், அல்லது* www.humanrights.gov.au *எனும் வலைத்தளத்தில் இணையவழியில் முறைப்பாடு செய்யலாம்.*

- *நீங்கள் விரும்பும் மொழியில் நீங்கள் முறைப்பாடு செய்யலாம், மற்றும் தேவைப்பட்டால் உங்களுடைய முறைப்பாட்டினை எழுதுவதற்கு எம்மால் உதவ இயலும்.*

- *முறைப்பாடு ஒன்றைச் செய்ய உங்களுக்கு சட்டதரணி ஒருவர் தேவையில்லை.*

- *உங்களுடைய முறைப்பாட்டினை எம்மால் கையாள இயலவில்லை என்றால், ஏன் இயலவில்லை என்பதை விளக்கிச் சொல்வோம்.*

## விசாரணை

- *உங்களுடைய முறைப்பாட்டினைப் பற்றிப் பேச உங்களுடன் நாங்கள் தொடர்புகொள்வோம், மற்றும் மேலதிகத் தகவல்கள் கொடுக்குமாறு நாங்கள் உங்களைக் கேட்கக்கூடும்.*

- *பொதுவாக, நீங்கள் யாரைப் பற்றி முறாஇப்படு செய்கிறீர்களோ அந்த நபருடன் அல்லது அந்த அமைப்புடன் நாங்கள் தொடர்புகொண்டு உங்களுடைய முறைப்பாட்டின் பிரதி ஒன்றை அவர்களுக்குக் கொடுப்போம். குறிப்பிட்ட தகவல்கள் மற்றும்/அல்லது உங்களுடைய முறைப்பாட்டிற்கான மறுமொழி ஒன்றைக் கொடுக்குமாறு நாங்கள் அவர்களைக் கேட்கக்கூடும். உங்களுடைய முறைப்பாட்டிற்கு மறுமொழியாக ஆணையத்திற்குக் கொடுக்கப்படும் தகவல்களில் உங்களைப் பற்றிய சொந்த மற்றும் உணர்வார்ந்தத் தகவல்கள் அடங்கியிருக்கக்கூடும்.*

- *சில தருணங்களில், உங்களுடைய முறைப்பாட்டினை மேற்கொண்டு கையாளத் தேவையில்லை என நாங்கள் முடிவு செய்யக்கூடும். இப்படி நடந்தால், ஏன் என்பதை நாங்கள் விளக்குவோம்.*

- *சமரசம் மூலமாக முறைப்பாடினைத் தீர்த்துக்கொள்ள முயற்சிப்பதைப் பற்றி நாங்கள் உங்களுடன் பேசக்கூடும்.*

### சமரசம்

- *பிரச்சினையைத் தீர்த்துக்கொள்வதற்கான வழி ஒன்றைக் காண உங்களுக்கும் நீங்கள் யாரைப் பற்றி முறைப்பாடு செய்கிறீர்களோ அந்த நபருக்கும் அல்லது அமைப்பிற்கும் உதவ நாங்கள் முயற்சி செய்வோம் என்பதை சமரசம் குறிக்கும்.*

- *'சமரச அமர்வு'* ('conciliation conference') *எனும் சந்திப்பு மூலம் நேருக்கு-நேராகவோ, தொலைபேசி மூலமான கலந்துரையாடல் மூலமாகவோ சமரசம் இடம்பெறலாம். சில தருணங்களில், மின்னஞ்சல் போக்குவரத்து மற்றும் சமரசப் பேச்சாளருடனான உரையாடல்கள் மூலம் முறைப்பாடுகளுக்குத் தீர்வு காணப்படலாம்.*

- *வெவ்வேறு பல வழிகளில் முறைப்பாடுகளுக்குத் தீர்வு காணப்படலாம். உதாரணமாக, ஒரு மன்னிப்பு மூலமாக, கோட்பாடு மாற்றம் மூலமாக அல்லது நஷ்ட ஈடு மூலமாகத் தீர்வு காணலாம்.*

## சாத்தியமான நீதிமன்ற நடவடிக்கை - பாலினம், இயலாமை, இனம் மற்றும் வயது ஆகியவற்றின் அடிப்படையிலான பாகுபாடு

- *சட்டத்திற்குப் புறம்பான பாகுபாடு நிகழ்ந்திருக்கிறதா என்று முடிவு செய்வதற்கான உரிமை 'ஆணைய'த்திற்கு இல்லை.*

- *உங்களுடைய முறைப்பாட்டிற்குத் தீர்வு காணப்படவில்லை என்றாலோ, வேறு சில காரணங்களை முன்னிட்டு மேற்கொண்டு விசாரிப்பது நிறுத்தப்பட்டாலோ, விடயத்தை நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்ல உங்களால் இயலக்கூடும். சட்டத்திற்குப் புறம்பான பாகுபாடு நிகழ்ந்திருக்கிறதா என்று நீதிமன்றத்தினால் முடிவு செய்ய இயலும்.*

- *'ஃபெடரல் சர்க்யூட் நீதிமன்றம்' அல்லது 'ஆஸ்திரேலிய ஃபெடரல் நீதிமன்ற'த்திற்கு நீங்கள் விண்ணப்பிக்க, முறைப்பாட்டு விசாரணையை 'ஆணையம்' நிறுத்திய நேரத்தில் இருந்து* 60 *நாட்கள் அவகாசம் உங்களுக்கு இருக்கும்.*

- *விடயத்தை உங்களுக்காக நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்ல, அல்லது உங்களுடைய வழக்கை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க 'ஆணைய'த்தினால் இயலாது.*

- *நீங்கள் நீதிமன்றத்திற்குச் செல்ல விரும்பினால், ஒரு சட்டதரணி அல்லது சட்ட சேவையுடன் நீங்கள் பேச வேண்டியிருக்கலாம்.*

## முடிவு/அறிக்கை - 'சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு III (ILO III)யின் கீழான பாகுபாடும் மனித உரிமைகளும்

- *முறைப்பாட்டிற்குத் தீர்வு காண இயலாவிட்டால், அல்லது வேறு சில காரணங்களை முன்னிட்டு முறைப்பாட்டு விசாரணையைத் தொடர்வது நிறுத்தப்பட்டால், 'ஆணைய'த்தின் தலைவரானவர் ILO III பாகுபாடு அல்லது மனித உரிமைகள் மீறல் நிகழ்ந்திருக்கிறதா என்பதை முடிவு செய்யக்கூடும்.*

- *'ஆணைய'த்தின் தலைவரானவர் பாகுபாடு அல்லது மனித உரிமைகள் மீறல் ஒன்று நிகழ்ந்திருக்கிறது என்று திருப்திப்பட்டால், 'ஃபெடரல் அட்டர்ணி ஜெனரல்' அவர்களுக்குத் தலைவர் விடயத்தினைத் தெரியப்படுத்தக்கூடும். ஒரு நபருக்கு ஏற்பட்டிருக்கும் எவ்வொரு இழப்பு அல்லது காயத்திற்கான நஷ்ட ஈடு ஒன்றினை இந்த அறிக்கையில் தலைவரால் பரிந்துரை செய்ய இயலும். இந்த அறிக்கை பாராளுமன்றத்தில் முன் வைக்கப்படலாம்.*

- பாகுபாடு மற்றும் மனித உரிமைகள் குறித்த 'தலைவ'ரது முடிவுகளின் மாதிரிகளை http://www.humanrights.gov.au/publications/reports-minister-under-ahrc-act எனும் வலைத்தளப் பக்கத்தில் காணலாம்.

## மேலதிகத் தகவல்களை நான் எங்கிருந்து பெறலாம்?

பின் வருவன 'ஆஸ்திரேலிய மனித உரிமைகள் ஆணைய'த்தின் தொடர்பு விபரங்களாகும்:

**தொலைபேசி**
'தேசிய தகவல் சேவை': 1300 656 419
தொலைத் தட்டச்சு (TTY) 1800 620 241
தேசியத் தொடர் மாற்று சேவை (NRS) 133 677
தொலை நகல்: (02) 9284 9611

மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் உங்களுக்குத் தேவைப்பட்டால், **131 450-**ஐ அழைத்து 'ஆஸ்திரேலிய மனித உரிமைகள் ஆணைய'த்துடன் தொடர்பு ஏற்படுத்தித் தருமாறு கேளுங்கள்.

நீங்கள் செவித்திறன் அற்றவராகவோ,செவித்திறன் குறைபாடு உள்ளவராகவோ இருந்தால், 1800 620 241-இல் TTY-ஐ அழைத்து எம்முடன் தொடர்புகொள்ளலாம். நீங்கள் செவித்திறன் அற்றவராகவோ,பேச்சுக் குறைபாடு உள்ளவராகவோ இருந்தால் 133 677-இல் 'தேசியத் தொடர் மாற்று சேவை (National Relay Service (NRS)) மூலம் எம்முடன் தொடர்புகொள்ளலாம். உங்களுக்கு 'ஆஸ்லன்' மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் தேவைப்பட்டால், உங்களுக்காக இதை எம்மால் ஒழுங்கு செய்ய இயலும்.

நீங்கள் பார்வைத் திறன் அற்றவராகவோ, பார்வைக் குறைபாடு உள்ளவராகவோ இருந்தால், உங்களது வேண்டுகோளின் பெயரில் மாற்று வழிகளில் எம்மால் உங்களுக்குத் தகவல்களை அளிக்க இயலும்.

**அஞ்சல்:**

GPO Box 5218
Sydney NSW 2001

**இணைய வழி:**
மின்னஞ்சல்: infoservice@humanrights.gov.au
வலைத்தளம்: www.humanrights.gov.au

http://www.humanrights.gov.au/complaints/lodging-your-complaint எனும் வலைத்தளப் பக்கத்திற்குச் சென்று இணைய வழியில் நீங்கள் முறைப்பாடு ஒன்றினைச் செய்யலாம்.

## பொதுவான சட்ட அறிவுரை

முறைப்பாடு ஒன்றைச் செய்வதைப் பற்றி நீங்கள் யோசித்துக்கொண்டிருந்தால், நீங்கள் சட்ட ஆலோசணை பெறுவதைக் கருத்தில் கொள்ளக்கூடும். பாகுபாடு மற்றும் உபத்திரவத்திற்கு ஆளாக்கப்படல் ஆகியவற்றைப் பற்றி இலவச அறிவுரை அளிக்கும் சமூக சட்ட சேவைகள் உள்ளன.

'சட்ட உதவி' (Legal Aid) அமைப்பு ஒன்றுடன் (https://www.nationallegalaid.org/for-individuals/) அல்லது உங்களுக்கு அண்மையிலுள்ள 'சமூக சட்ட மைய'த்துடன் (www.naclc.org.au/directory) நீங்கள் தொடர்புகொள்ளலாம்.

**மறுப்புக்கூற்று: இந்தத் தகவல் ஏட்டில் உள்ள தகவல்கள் ஒரு வழிகாட்டி என்ற நோக்கத்தில் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளன. சட்ட ஆலோசனைக்கு இது ஒரு மாற்று ஆகாது.**